கேவலம் ஒரு நாய்!

'புனிதன்'

சுத்தம் செய்யப்பட்ட தன் இரட்டைக் குழல் துப்பாக்கியைக் கட்டில் விளிம்பில் சாத்தி வைத்தான் துரை. தோட்டாக்களைச் சரி பார்ப்பதில் அவன் கவனம் பதிந்திருந்தது.

''கன்னியப்பா,'' என்று இடையில் குரல் கொடுத்தான்.

கூடாரத் திரையை விலக்கிக்கொண்டு குறவன் கன்னியப்பன் எட்டிப் பார்த்தான். சனப்பனூர் எஸ்டேட்டைச் சேர்ந்தவர்கள் கன்னியப்பனைத் துரைக்குத் துணையாக ஏற்பாடு செய்திருந்தார்கள். சேலத்துச் சீமானான துரைக்கு அவர்கள் மிகவும் வேண்டியவர்கள். தங்கள் எஸ்டேட்டை அடுத்த காடு வேட்டைக்குத் தகுந்த இடம் என்று அவனுக்கு எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியிருந்தார்கள். இப்போதுதான் துரைக்கு இந்நப் பக்கம் வருவதற்கு ஒழிந்தது.

கன்னியப்பன் தயக்கத்துக்குக் காரணம் தெரிந்ததும் துரைக்குச் சற்றுப் பெருமையாக இருந்தது. அவன் கட்டிலுக்கு அடியிலே யிருந்த உயர்ந்த ஜாதி இளஞ்சிவப்பு நாய் அந்தக் குறவனை ஏறிட்டு நோக்கி நிமிர்ந்து நின்றது.

அதன் தலையை மெல்லத் தடவி விட்டுக்கொண்டு, ''இந்தக் காட்டுக்குள்ளே என்ன கிடைக்கும்?'' என்றான் துரை.

''உங்களைப் போலத்தான் போனமாதம் வந்த ஒருவர் சிறுத்தைப் புலி அடித்தார். கழுதைக் குறத்தி நிறைய மேய்கிறது. காட்டுப் பன்றிக் கூட்டம் ரொம்ப அதிகம். அப்புறம் குள்ள நரி—அதோ ஊளையிடுவது கேட்கவில்லை? நாங்கள் காடை, கவுதாரி முயல் அடிப்போம். மானும் கடமையும் கூட இருக்கிறது. மணிப்புறு பிலு பிலுவென்று திரியும்,'' என்று அடுக்கினான்.

துரை கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். ரேடியத்தால் மின்னிய எண்கள் பதினொன்றரை என்று காட்டின. வெளியே கும்மிருட்டு. தொலைவிலே கோட்டான் ஒன்று சுருதி சேர்த்துக் கொண்டிருந்தது. மழை அடங்கிய வேளையாதலால் சில் வண்டின் ரீங்காரமும் தவளைகளின் அலறலும் துணை சேர்ந்தன.

இருந்தாற் போலிருந்து திடீரென்று—என்ன பயங்கர வெடி!

''வேறு யாராவது வேட்டைக்கு வந்திருக்கிறார்களோ?'' என்று முகத்தைச் சுளித்தான் துரை.

வெடி வந்த திக்கில் பாய்ந்தோடத் துடித்த கன்னியப்பன், "கொஞ்சம் பொறுங்கள் முதலாளி! இல்லாவிட்டால் காட்டுப் பன்றி தப்பி ஓடிப்போகும்," என்று சொல்லிக்கொண்டே வெளியே பாய்ந்தான்.

அவன் பேச்சு வேடிக்கையாக மட்டுமல்ல, ஆவலைத் தூண்டுவதாகவும் இருந்தது துரைக்கு. அவன் ரோஸியைக் கூடக் கவனிக்காமல் கன்னியப்பனுடன் ஓடினான். காட்டு மனிதன் என்றால் கன்னியப்பனுக்குத்தான் தகும். காக்கை முள்ளையும் ஜங்கம் புதர் வேல மரங்கள் எதையும் பொருட்படுத்தாமல் என்ன வேகமாய் ஓடுகிறான்! அவனுக்கு வழி காட்டுவதைப் போல் முன்னால் தாவியோடுகிறதே ஒரு நாய்! இவன் இருப்புக்கு வேட்டை நாய் வேறு?

துரை டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தான். விளக்கின் ஒளி எட்டும் தொலைவிலே ஒரு காட்டுப் பன்றி சுருண்டு சுருண்டு விழுந்து விழுந்து ஓடிக்கொண்டிருந்தது.

"கறுப்பா! விடாதே, பிடி," என்று கத்தினான் கன்னியப்பன்.

டார்ச் வெளிச்சத்தில் மருண்டு நிற்கும் குழி முயலையும் பொருட்படுத்தாமல் அந்தப் பன்றியைக் குறி வைத்துப் பாய்ந்தது அந்தப் பட்டி நாய். அடிபட்ட பன்றியை நகர வொட்டாமல் அது அழுத்திப் பிடிக்கவும் துரையும் குறவனும் அதன் அருகில் செல்லவும் சரியாக இருந்தது.

பன்றியின் தலைப்புறம் உருத் தெரியாமல் பிய்ந்து போய் ரத்த விளாருகியிருந்தது. எப்படி இத்தனை முரட்டு ஜந்துவை இவ்வளவு கடுமையாகத் தாக்க முடியும் என்று வியந்தான் துரை. "ஏண்டா, யார் இதை இப்படிச் சுட்டது?"

கன்னியப்பன் மெல்லச் சிரித்தான். "இது நான் வைத்த வெடிதான் எசமான். மாங்கொட்டைக்குள்ளே இருக்கிற பருப்பை எடுத்துவிட்டுக் கரிமருந்தைப்போட்டுக் கெட்டிக்கவேண்டும். வாசனைக்காக மேலே கொழுப்பை மூடி இறுக்கிவிட்டு இப்படி வயல் புறத்தில் வைப்பது வழக்கம். வயலைத் துவம்சம் செய்ய வரும் காட்டுப் பன்றி இதைக் கடித்தால் போதும். இந்தக் கதிதான்," என்று பெருமையுடன் கூறிவிட்டுத் தன் நாயைத் தட்டிக் கொடுத்தான்.

அதைத் துரை அருவருப்போடு பார்ப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

இந்த உலகத்தில் கறுப்பனைத் தவிர அவனுக்கு வேறு துணையே இல்லை. ஒரு முறை தன் உயிரையும் கொடுக்கத் துணிந்ததே அதை நினைத்துக் கொண்டால் இப்போது கூட அவன் மெய் சிலிர்த்தது. அதனுடைய துணிந்த வேலையால்தானே இப்போது அதன் வலது முன்னங்கால் ஊனமாக இழுத்து இழுத்துக்கொண்டு நடக்கும்படி ஆயிற்று.

அன்று பகல் வேளைதான். அடர்ந்த நுணா மரத்தில் கவுதாரிக்குக் கண்ணி விரித்தான் கன்னியப்பன். ஈச்சம் புதரை அடுத்துத் தாழ வளர்ந்திருந்தது அந்த மரம். மறைந்திருக்கும் அபாயத்தை அதனால் தான் உணரவில்லை அவன். புதர் மறைவிலிருந்து குபீரென்று அவன் மேல் பாய்ந்துவிட்டது ஒரு சிறுத்தைப் புலி.

''கறுப்பா!'' என்று அலறிக்கொண்டு மரத்திலிருந்து விழுந்தான் கன்னியப்பன்.

அடுத்த வினாடி—அந்தப் பட்டி நாய்க்குத்தான் என்ன துணிச்சலோ—அந்தச் சிறுத்தையுடன் சரிக்குச் சரியாக நின்றது. கன்னியப்பன் கையில் குத்துக்கோல் இருந்ததோ, கறுப்பன் பிழைத்ததோ! சிறுத்தைப் புலியின் தோலுக்குக் கிடைத்த பணமெல்லாம் கறுப்பனுக்கும் தனக்கும் ஏற்பட்ட காயங்களுக்கு மருந்து போடவே சரியாக இருந்தது...

கன்னியப்பன் அதன் கழுத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு முகத்தோடு முகம் வைத்துக்கொண்டான்.

''சரிதான், கொஞ்சியது போதும். பன்றியை இழுத்துப் போட்டு விட்டு வாடா. அங்கே ரோஸிக்கு சூப் வைத்தானா, எலும்பு போட்டானா போய்ப் பார்க்கணும்,'' என்று முன்னால் விரைந்தான் துரை.

கன்னியப்பன் எல்லாமான தன் நாயை இழுத்துக்கொண்டு முன்னே நடந்தான்.

சினப்பனூர் எஸ்டேட் பாக்குத் தோப்புக் காட்சி கண்கொள்ளாக் காட்சி. ஒரு பாக்கு மரத்தில் ஏறுகிறவன் பாக்குப் பழத்தைப் பிய்த்து எறிந்ததும் அதன் உச்சியிலிருந்தே அடுத்த மரத்தில் தொத்திக்கொள்வதும், அப்படியே எல்லா மரங்களிலும் தாவுவதும் வேடிக்கையாக இருந்தது. அதைக் கவனித்துக்கொண்டே மேலே நோக்கியபோது கூட்டமாக வானத்தில் நீந்தும் மணிப் புறுக்கள் துரையின் கண்ணைக் குத்தின.

இரட்டைக் குழல் துப்பாக்கி மேலே உயர்த்தப் பட்டது. ஒரே தோட்டாதான் செலவு. குபீரென்று பல புறுக்கள் உதிர்ந்தன.

ரோஸி—துரையின் உயர்ந்த ஜாதி நாய் அவற்றைக் கௌவி வரப் பாய்ந்தது. கன்னியப்பனின் கறுப்பனும் ஒத்தாசைக்குப் பாய்ந்தது. அதைப் பார்த்ததும் துரை பாய்ந்தான் அதை நோக்கி. துப்பாக்கியைத் திருப்பிக்கொண்டு அதன் விலாப் புறத்தைத் தட்டி விட்டான். ''இந்த வங்கு பிடித்த நாய்க்குப் பக்கத்தில் ரோஸி போனால் அதற்கும் தொத்திக்கொள்ளும்,'' என்றான் கடுமையாக.

அடிபட்ட கறுப்பன் 'வாழ் ஊழ்' என்று கத்திக்கொண்டே துரையின் காலைச் சுற்றிக்கொண்டது. கன்னியப்பன் தலை குனிந்து அதைத் தட்டிக்கொடுத்து இழுத்துச் சென்றான்.

சுடப்பட்ட புறாக்களுடன் கூடாரத்துக்குச் சென்றபோது அவனுடைய வேலைக்காரன் முதலில் அந்த ரோஸியைத்தான் கவனித்தான். பீங்கான் கோப்பையில் கமகமக்கும் உணவு வகைகள். அதைப் பார்த்து ஒதுங்கி நின்றான் கன்னியப்பன்.

பரிமாறிய உணவில் பாதியைக்கூடத் தின்றிருக்காது ரோஸி. முன்னங் காலை ஊன்றி உடலைப் பின்புறம் நெளித்து வளைத்து உடலைச் சிலுப்பிக்கொண்டது. அத்துடன் பின்னங் கால்களால் மண்ணைப் பிறாண்டி தன் சாப்பாட்டுத் தட்டில் தள்ளியது. கன்னியப்பன் மனம் கேட்காமல், "கறுப்பன் அதை நன்றாகத் தின்னும் எசமான். அந்த மிச்சத்தை எடுத்துக்கொள்ளட்டுமா எசமான்?" என்று அஞ்சி அஞ்சிக் கேட்டான் துரையிடம்.

துரை உதட்டுக் கோணலில் ஓர் அலட்சியச் சிரிப்பைச் சிந்திக்கொண்டு, "போடா, அசல் புல்டாக் வகையில்லையா உன் நாய்! அதற்கு இந்த மாதிரி சாப்பாடு இல்லாமல் குறைவாயிருக்கிறதோ?" என்று எழுந்து போய்விட்டான் படுத்துக்கொள்ள.

கூடாரத்தின் மூலையொன்றில் கட்டப்பட்டிருந்த கறுப்பன் தனக்குள்ளேயே ஊளையிட்டுக்கொண்டிருந்தது.

கண் மூடித்தனமாய் நேற்றுக் குறவனுடன் ஓடியது எத்தனை தவறாகப் போய்விட்டது! துரை காலிலும் கைப்புறத்திலும் ஏற்பட்டிருந்த சிராய்ப்புகளுக்குக் களிம்பு போட்டுக்கொண்டிருந்தான். அவன் உடம்பில் உண்டான எரிச்சல் மனத்திலும் உண்டாயிற்று.

"டேய் கன்னியப்பா!" என்று அதட்டினான்.

கூடாரத் திரையை ஒதுக்கிக்கொண்டு கன்னியப்பன் எட்டிப் பார்த்தான். "எஜமான்!"

கட்டில் விளிம்பில் சாய்த்து வைத்திருந்த இரட்டைக் குழல் துப்பாக்கியை எடுத்து மடக்கித் தோட்டாக்களைச் செருகிக்கொண்டே பேசினான். "முதலில் என் துப்பாக்கிக்கு ஒரு காட்டுப் பன்றிதான் இரையாக வேண்டும். அது இருக்கிற இடமாகப் பார்த்து அழைத்துப் போ."

கூனிக் குறுகி நின்ற கன்னியப்பன், "ஐயா கோபித்துக்கொள்ளக் கூடாது. இந்தத் துப்பாக்கிக் குண்டுக்கு மசியக்கூடியதல்ல அந்த ஜாதி. தப்பியோடி விடும்," என்றான்.

தன் வேட்டைத் திறத்துக்கு விடும் சவாலாகத்தான் அதை நினைத்தான் துரை. "அதையும் பார்த்துவிடுகிறேன். கமான் ரோஸி," என்று தன் ஜாதி நாயையும் இழுத்துக்கொண்டு துப்பாக்கியைத் தோளில் மாட்டிக்கொண்டு கிளம்பினான்.

கன்னியப்பனுக்குப் பின்னே அவனுடைய கறுப்பனும் வந்தது.

தென்னந் தோப்புக்குள் நுழைந்தபோது திடீரென்று ஒரு நெற்றுத் தேங்காய் முன்னே விழுந்தது. கொஞ்சம் மிஞ்சியிருந்தால் துரையின் தலையே பிளந்திருக்கும். அவன் ஆத்திரத்தோடு மேலே நிமிர்ந்தான். தேங்காயைத் தள்ளிவிட்ட மந்தி இளித்துக் காட்டிக் குதித்தது. விரைந்து எடுத்தான் வேட்டைத் துப்பாக்கியை.

குறவன் தடுத்து நிறுத்தி, "அதை ஏதாவது செய்தால் ஊர்க்காரர்கள் சும்மா விடமாட்டார்கள் பண்ணைக்காரரை," என்று எச்சரித்தான்.

சனப்பனூர் மலைக் காட்டு விளிம்பைத் தொட்டு நடந்தார்கள் இருவரும். தன் கால் பக்கம் கறுப்பன் வரும்போதெல்லாம் துரை பூட்ஸ்காலால் தள்ளிவிட்டுக்கொண்டே வந்தான். கறுப்பன் அதைப் பொருட்படுத்தாமல் கம்பீரமாக முன்னேறிக்கொண்டிருந்தது.

கானகத்தின் அடர்ந்த பகுதி. கடும் வெயிலாகத்தான் இருந்தது. அதை யார் கவனிக்கிறார்கள்? தரையெல்லாம் அளைந்தெடுக்கப்பட்டுக் கொட்டிக் கிழங்கும் காட்டு வள்ளியும் கெல்லியெடுக்கப்பட்ட அடையாளம் தென்பட்டது. "இங்கேதான் எங்கேயாவது இருக்கும் பன்றி," என்றான் கன்னியப்பன்.

உடனே தன் துப்பாக்கியைச் சரிப்படுத்திக்கொண்டான் துரை.

"போடா கறுப்பா, பார்," என்று கன்னியப்பன் தட்டிவிட்டான் நாயை.

அங்கிருந்த புதர்களையெல்லாம் இடமறிந்து வைத்திருந்த கறுப்பன் காக்கை முள் புதர் இடுக்கில் தலையைவிட்டுப் பார்த்தது. மறுகணம் வாள் என்று குரைத்துக் குதித்து எகிறியது. நுணுக்கமறிந்த கன்னியப்பன் தன் குத்துக்கோலை அந்த இடத்தில் விட்டு நெம்பினான். வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல் குபீரென்று அந்த அடர்ந்த புதரினுள்ளிருந்து சீறி வந்தது ஒரு காட்டுப் பன்றி.

ஆகா! கறுப்பன்தான் அப்போது எத்தனை நேர்த்தியாக இடைமறித்து வெட்டி அதன் கவனத்தைத் திருப்பியது! இப்பொழுது குறவனை விட்டுவிட்டு ஆங்காரத்துடன் கறுப்பன் பக்கமாகத் திரும்பிக்கொண்டது அந்தக் காட்டுப் பன்றி. கன்னியப்பனுக்குப் பக்கத்திலேயே ஒதுங்கிக்கொண்டு இந்தச் சண்டையைத் திகைப்போடு நோக்கியபடி நின்றுவிட்டது ரோஸி. பங்களா வாயிலுக்கு அழகு செய்யும் அதற்கு இத்தகைய பயங்கர அனுபவம் ஏற்பட்டதில்லை, பாவம்!

கன்னியப்பன் தன் குத்துக்கோலை ஓங்கினான். தொலைவிலிருந்து துரை கத்தினான். "டேய், நீ சும்மா இரு."

அவனுடைய துப்பாக்கி பன்றியைக் குறி பார்க்கும்போது கன்னியப்பன் பதறினுன்: ''சாமி, நாய் ஜாக்கிரதை.''

துப்பாக்கி பயங்கரமாக வெடித்தது. காட்டுப்பன்றி துள்ளிய வேகத்தில் அதன் தோலை மட்டும்தான் உரசிக்கொண்டு போக முடிந்தது அந்தக் குண்டால். பன்றி தெறித்தோடும் திக்கில் படீரென்று மீண்டும் வெடி. நிச்சயம் அடிபட்டிருக்க வேண்டும். ஆனுல் இத்தனை கடுவேகத்துடனு பாயும் ஒரு பன்றி! மானுக்கு இளைத்ததில்லை அதன் வேகம்,

''கறுப்பா, விடாதே, பிடி!''

குறவன் குரல் கேட்டதும் கறுப்பனின் பாய்ச்சல் இன்னும் அதிகமாயிற்று. அந்தப் பன்றியுடனே சென்று மறைந்தது அது.

ரோஸி வாலைக் குழைத்துக்கொண்டு துரையின் அருகில் வந்தது. தன் வீரத்துக்குச் சரியான பாராட்டுக் கொடுக்கிறது அது என்ற எண்ணத்தில் அதைத் தட்டிக் கொடுத்தான் துரை. உடனே அருகிலிருந்த புதரை நோக்கிப் பாய்ந்தது. தரையோடு ஒட்டிக் கொண்டு நகர்ந்த காடையின்மேல்தான் அப்படித் தாவியது. வெற்றி தான். அது கௌவிக்கொண்டு வந்து காட்டிய காடையைப் பார்த்துப் பூரித்துப் போனுன் துரை.

அன்றைய வேட்டையை முடித்துக்கொண்டு திரும்பும்போது நடுப்பகல் சாப்பாட்டு நேரமும் மிஞ்சிவிட்டது. சமையற்காரனைப் பரிமாறச் சொல்லிவிட்டு ரோஸியுடன் கொஞ்சம் விளையாடத் துவங்கினுன் துரை. அவன் வாயில் ரொட்டித் துண்டைக் கௌவிக் கொண்டு நிற்பதும் ரோஸி தாவிப் பாய்ந்து அதைக் கௌவிப் பறிப்பதுமாய் இருந்தனர். பரிமாறிவிட்டு வந்த சமையல்காரன், அவர்களைக் கூப்பிடவும் அஞ்சி, கூடார வாசலிலேயே நின்ருன்.

கன்னியப்பனுக்கு இந்தப் பக்கத்திலேயே நாட்டமில்லை. தன்னுடைய கறுப்பன் சென்ற திசையையே பார்த்துக்கொண்டிருந்தான்.

கையிலிருந்த ரொட்டித் துண்டுகளெல்லாம் தீர்ந்த பின்னர்தான் அருகிலிருந்த பலாமரத் தண்டில் சாய்த்து வைத்திருந்த துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு உள்ளே திரும்பினுன் துரை.

அப்போதுதான் உற்சாகத்தோடு குரைத்துக் கொண்டே கறுப்பனும் அங்கு வந்தது. அந்தக் குரைப்பைக் கேட்டுக் குறவன் அருகில் வந்தான் துரை. பாய்ந்து வந்த கறுப்பன் அவர்கள் இருவர் கால்களையும் பொதுவாகச் சுற்றிச் சுற்றி வந்தது. அதன் வாய்ப்புறம் உடம்பெல்லாம் ஒரே ரத்தச் சேறு. காட்டுப் பன்றியை வெற்றி கொண்ட எக்களிப்பிலே துரையின் மேலேயும் விழுந்து புரண்டது.

"எனக்குத் தெரியும் ஐயா. என் நாய் அதை அடித்துப் போட்டு விட்டுத்தான் திரும்பும்" என்றான் குறவன் பெருமையோடு.

கறுப்பன் தன் முகத்திலிருந்த கருஞ் சிவப்பான ரத்தக் கறையைத் துரையின் வெள்ளைச் சட்டையில் அப்பியதோடு மட்டுமல்லாமல், அவனுடைய உறையிட்ட பூட்சையும் கௌவியது. துரையின் அருவருப்பு மீறி ஆத்திரம் உடைபடவே காலால் ஓங்கி உதைத்து விட்டான் கறுப்பனை. அவனுக்குள் புகைந்துகொண்டிருந்த குரோதம் அப்படிப் பற்றிக்கொண்டது.

ரத்த வெறி தீராத கறுப்பன் குப்பென்று அவன் மேல் பாய்ந்தது.

திட்டமிட்டு வைத்தது போல அடுத்த கணம் அவனுடைய துப்பாக்கி கறுப்பனுக்குக் குறி வைத்துவிட்டது.

"சாமி... சாமி! ஐயோ, கறுப்பா!" என்ற குறவனின் அலறலுக்கிடையே வெடித்துவிட்டது அது.

தன் காலுக்கடியில் ரத்தம் கக்கிக்கொண்டு சுருண்டு விழுந்த கறுப்பனை மீண்டும் உதைத்துத் தள்ளினான் துரை. "போடா பெரிய நாயைக் கண்டுவிட்டான்! தூக்கி எறிந்துவிட்டு வா. ராத்திரிக்குப் பெரிய வேட்டைக்குப் போகவேண்டும். ஒரு சிறுத்தைப் புலியாவது சுட வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே கையலம்பத் தண்ணீர் கேட்டான் அவன்.

மறு நாள் காலையில்தான் குறவனைச் சந்திக்க முடிந்தது.

துரை தன் ரோஸிக்குச் சோப்புப் போட்டுக் குளிப்பாட்டி விட்டு அப்போதுதான் பௌடர் போட்டுக்கொண்டிருந்தான்.

"ஏண்டா ராத்திரி வரவில்லை?" என்று அதட்டினான் துரை.

"இல்லை சாமி, அந்தக் காட்டுப் பன்றியை இழுத்துக்கொண்டு வந்து......" என்று கைகளைப் பிசைந்துகொண்டான்.

"போடு சக்கை! ராத்திரியெல்லாம் அமர்க்களமா?" என்றான் துரை, உற்சாகமாகத் தன் ரோஸியின் கால்களை உருவி விட்டுக் கொண்டே.

குறவன் வறண்ட சிரிப்புச் சிரித்தான்.

"டேய், என்னடா இன்னும் ஆகவில்லை!" என்று உள் பக்கம் திரும்பி இரைந்தான் துரை.

"இதோ, கொண்டு வந்துவிட்டேன் சார்" என்று பீங்கான் தட்டில் ரோஸிக்கு ஆகாரம் கொண்டுவந்து வைத்தான் சமையல்காரன்.

ரோஸி இப்போது அந்தத் தட்டைவிட்டு விலகிக் குறவனையே மோப்பம் பிடித்துச் சுற்றிச் சுற்றி வந்தது. அவன் சுருட்டி வைத்திருந்த மடிப்பக்கமாகத் தாவியது.

"என்னடா வைத்திருக்கிறாய்?" என்றான் துரை நெற்றியைச் சுருக்கிக்கொண்டு.

"வேண்டாம் சாமி. இது ஒரு..."

"சும்மா சொல்லு."

"ஒன்றுமில்லை. காட்டுப் பன்றியின் கல்லீரல். கறுப்பனுக்கு இது என்றால் ரொம்ப இஷ்டம்," என்று கருநீலத்தில் கைப்பிடி அளவிருந்த ஈரலை எடுத்துக் காட்டினான்.

ரோஸி அதன்மேல் தாவியது.

"சரி சரி, அதைக் கொடு அதற்கு!"

"உங்களுக்கில்லாதது எனக்கு எதற்கு சாமி?" என்று ரோஸியின் பீங்கான் தட்டில் அதைக் கொண்டுபோய் வைத்தான் குறவன்.

ரோஸி ஆவலோடு பாய்ந்து சென்று அதைக் கௌவியது. வெறியுடன் ஒரு கடி—

அடுத்த கணம் அந்தப் பிராந்தியமே அதிரும்படியான வெடி! அங்கு எழுந்த புகை அடங்கியதும் கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தான் துரை. அந்தப் பீங்கான் தட்டு சில்லுச் சில்லாகப் போயிருந்தது.

ரோஸி—ஐயோ! அதன் தலையையே காணோம்!

கால்கள் லேசாக அசைந்தன. அதற்கு அருகிலே வந்து நின்றவன் கன்னியப்பன்தான்.

"இதை நீங்கள் தூக்கி எறிகிறீர்களா, நான் தூக்கி எறியட்டுமா சாமி?" அந்தக் குறவன்தான் கேட்டான்.

அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் துரை.

அந்த வெறிச் சிரிப்பு—அந்த முகத்தில் இதற்கு முன் இவ்வளவு கொடூரமானதை அவன் பார்த்ததேயில்லை.